**தேதி:-13-09-2021 அசல்வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:- (7 முதல் 9 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்)**

நானும், 4 ஆம் பிரதிவாதியும் சேர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் மேல்முறையீடு நடவடிக்கை செய்தோம். அந்த சமயத்தில் மற்ற வாதிகளையும், மற்றும் 5, 6 பிரதிவாதிகளையும் கலந்து ஆலோசித்துதான் அந்த நடவடிக்கை எடுத்தேன். அந்த நடவடிக்கையை என் சித்தப்பா மகன் சந்தானகிருஷ்ணன் மற்றும் இடத்தை வாங்கிய 7 ஆம் பிரதிவாதியின் கணவர் சந்திரன் மீது எடுத்தேன். என் அப்பா மற்றும் மற்றவர்கள் பெயரிலுள்ள கூட்டுப்பட்டாவை 1987 ல் தெரியாமல் மாற்றிவிட்டார்கள் என்று மாவட்ட வருவாய் அலுவலகத்தில் கூறினோம். அந்த மேல்முறையீட்டு நடவடிக்கை எங்களுக்கு பாதகமாக முடிவானது என்றால் சரியல்ல. சிவில் கோர்ட்டுக்கு போகச் சொல்லி சொல்லிவிட்டார்கள். வாதிகளாகிய எங்களுக்கும் மற்றும் 4 முதல்6 பிரதிவாதிகளுக்கும் இடையே கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவும் தற்போது வரை சுமூகமான உறவு உள்ளது என்றால் சரியல்ல. முன்பு மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்யும் போது சுமூகஉறவு இருந்தது. பின்னர் இந்த வழக்கிற்கு அவர்கள் ஒத்துழைக்கவில்லை. இன்றைய தேதி வரை 4 முதல் 6 பிரதிவாதிகளிடம் சுமூகஉறவு உள்ளதென்றால், வழக்கிற்கு பின்பு தாத்தா எழுதி வைத்த உயிலை அவர்கள் காண்பித்த பின்பு தற்போது பேசிக் கொள்கிறோம். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது பி.சா.ஆ.1 உயில் இருப்பது எனக்குத் தெரியாது. உயில் இருக்கும் விபரம் கடந்த 29.01.2020 ல் என்னை 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யும் போது தான் முதலில் தெரியுமா என்றால், அதன் முன்பு தெரியும். என்னிடம் அது சம்பந்தமான நகல் எதுவும் கிடையாது. நான் முதன்முதலில் 29.01.2020 ல் தான் நீதிமன்றத்தில் வைத்துதான் உயிலை பார்த்தேன். அதற்கு முன்பு நாகராஜன் வகையறா என்னிடம் உயிலை காட்டவில்லை. இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த வழக்கில் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்ன ஆட்சேபணை

தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது. அசல்உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு என்னை குறுக்குவிசாரணை செய்யும் போது தான் நான் பார்த்தேன். உயிலில் என்ன விசயங்கள் கூறப்பட்டுள்ளது என்று நீதிமன்ற அனுமதியுடன் தெரிந்து கொண்டேனா என்றால், உயிலில் கூறப்பட்டுள்ள விசயங்கள் தெரிந்து கொண்டேன். வாதிகளாகிய நாங்களும், 4 முதல்6 பிரதிவாதிகளும் சேரந்து கூட்டுச்சதி செய்து மோசடியாக உயிலை தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தாத்தா கிருஷ்ணசாமி எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவாச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள சொத்துக்களை தவிர வேறு நிலங்கள், காலிமனைகள், வீடுகள் என் தாத்தா கிருஷ்ணசாமிக்கு பாத்தியப்பட்டிருந்தது. 1962 ஆம் ஆண்டில் என் தகப்பனார் மற்றும் அவருடன் பிறந்தவர்கள் மேற்படி சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. 1962 ஆம் ஆண்டு நடந்த பாகத்தில் சந்தானகிருஷ்ணனின் தகப்பனார் ஜெயராம்நாயுடுக்கு தாவாச் சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரியல்ல. 1965 ஆம் ஆண்டில் ஜெயராம்நாயுடு இறந்துவிட்டார் என்றால் 1966 ம் ஆண்டில் இறந்துவிட்டார். ஜெயராம்நாயுடு இறந்தபின்னர் தாவாச் சொத்துக்கள் அவர் மனைவி ராணி மற்றும் மகன் சந்தானகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிடைத்து அவர்கள் தனித்த சுவாதீனத்தில் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ராணி எந்த வருடம் காலமானார் என்று எனக்கு வருடம் தெரியாது. 1987 ல் சந்தானகிருஷ்ணன் பெயரில் தாவாச் சொத்துக்களுக்கு பட்டா ஏற்பட்டது. தாவாச் சொத்துக்களை 1 முதல்3 பிரதிவாதிகள் 7 ஆம் பிரதிவாதியின் கணவருக்கு 2008 ஆம்ஆண்டில் கிரைய்ம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்களை பொறுத்து சந்தானகிருஷ்ணன்தான் பாத்தியதாரர் என்றும், அவருக்கு தான் அனைத்து உரிமைகளும் உள்ளது என்றால் சரியல்ல. 1 ஆம பிரதிவாதிக்குரிய பாத்தியதையை தெரிந்து கொண்டு சரியான பிரதிபிரயோசனத்திற்கு 7 ஆம்பிரதிவாதியின் கணவர்

தாவாச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 2008 ஆம் ஆண்டு கிரையப்பத்திரம் ஏற்பட்ட பின்னர் சந்திரன் இறந்துவிட்டார் எந்த வருடம் என்று தெரியாது. 2008 ஆம் ஆண்டில் கிரையத்திற்கு பின்பு சந்திரன் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் கிஸ்தி செலுத்தி வந்து அவர் இறந்த பின்னர் 7 முதல் 9 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டு கிஸ்தி செலுத்தி வந்தார்கள் என்றால் சந்திரன் பெயரில் தான் பட்டா உள்ளது. 7 முதல் 9 பிரதிவாதிகள் கிஸ்தி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் 7 முதல்9 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் உள்ளதென்றும், பிராதில் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 7 முதல் 9 பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்களும், 4 முதல்6 பிரதிவாதிகளும் சேர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் நடவடிக்கை எடுத்து அதன் பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 7 முதல்9 பிரதிவாதிகளுக்கு நாங்கள் அதிகபட்ச செலவுத்தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.